ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

ஜனவரி 2010

மலர் 3 இதழ் 1

India ECHOES

ONE WORLD ONE HUMANITY

For Private Circulation Only

உங்கள் அனைவருக்கும் இந்த புதிய ஆண்டு, ஏற்றம் தரும் ஆண்டாக அமைய, எங்களது வாழ்த்துக்கள். நாம் இப்போது உலகம் முழுவதும் பிரசுரிக்கப்படும் எக்கோஸ் செய்திமடல்களின் பொதுவான புதிய பரிமாணத்தைப் பார்ப்போம்.

இந்த இதழின் பொருளடக்கம்

மாஸ்டரின் பயணங்கள். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . பக்கம் 1-4
அறிவிப்புகள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . பக்கம் 5
மண்டலச் செயல்பாடுகள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . பக்கம் 6-10
ஒளி மையம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . பக்கம் 11







## மாஸ்டரின் பயணங்கள்

**துறையூர்:** தென் தமிழ்நாட்டில், திருச்சியிலிருந்து 45 கிமீ தொலைவிலுள்ள இந்த நகரமானது, 2001-ஆம் ஆண்டு, இரண்டு அப்யாசிகளைக் கொண்டு துவங்கி, அதி வேகமாக வளர்ந்து, தற்சமயம் 150 அப்யாசிகளைக் கொண்டுள்ளது. இந்த வேகத்தைக் கருத்தில் கொண்டு, ஒரு ஆசிரமம் இங்கு தேவை என்பதை உணர்ந்து, ஒரு ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது.

மாஸ்டர் அவர்களின் முதல் வருகையான 25 அக்டோபர் அன்று, அப்யாசிகள் அங்கு பேரானந்தமான சூழலை அனுபவித்தனர். 850 க்கும் மேற்பட்ட அப்யாசிகளுக்கு அவர் சத்சங்கம் நடத்தியதுடன், அதனைத் தொடர்ந்து தமிழிலும் உரையாற்றினார். அவர்தம் உரையில், சாதி, மதம், மற்றும் தேவையற்ற சடங்குகள் போன்றவைகளிலிருந்து முழுமையாக விடுபட்டு முன்னேறி, உள்முக மாற்றத்தைக் கொண்டுவந்து, அம்மாற்றத்திற்கேற்றவாறு, வெளிப்புற செயல்களையும் அமைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தின் முக்கியத்துவத்தை, சுட்டிக் காட்டினார். இந்த மாற்றங்கள், மற்றவர்களை நம் மிஷன்பால் ஈர்க்கும் என்று அவர் கூறினார்.

ஆசிரமத்தின் கட்டுமானப் பணிகள் துவங்குவதற்கு முன்பே, மாஸ்டர் எதிர்கால விரிவாக்கம் பற்றி கலந்துரையாடினார்! நமது கண்ணோட்டம் தற்காலத்தையொட்டியே இருக்கும்போது, மாஸ்டரின் பார்வை அடிக்கல் நாட்டும்பொழுதே எதிர்காலத்தைப் பற்றி மிகவும் விசாலமாக விரிந்துள்ளதற்கு, இது ஒரு ஆதாரமாகும்.

## சிலிகுரி & காங்டாக்

மாஸ்டர், நவம்பர் 2 அன்று, கொல்கத்தாவிலிருந்து பக்டோக்ராவிற்கு விமானத்தில் சென்றார். அவருக்கு அங்கு, அதிக அளவில் கூடியிருந்த அப்யாசிகளால், சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர், விமான நிலையத்திலிருந்து ஒரு மணி நேர பயண தூரத்திலுள்ள, புதிதாக வாங்கப்பட்ட மிஷன் இடத்திற்கு புறப்பட்டார். பின்னர், 5.30 மணியளவில், சிலிகுரியில் உள்ள ஒரு ஹோட்டல் அரங்கத்தில் சத்சங்கம் நடத்தினார்.

அடுத்த நாள் காலை 7:00 மணி சத்சங்கத்திற்கு, 6:30 மணிக்கு முன்பே மாஸ்டர் அவர்கள் தியானக்கூடத்திற்கு வந்தமர்ந்து, அப்யாசிகளின் வருகைக்காக காத்திருந்தார். பின்னர் அவர் 9:00 மணிக்கு, சிலிகுரியிலிருந்து காங்டாக்(சிக்கிம்)கிற்கு, கண்களைக் கவரும் வகையிலமைந்த டீஸ்டா நதியோர சாலை வழியாக புறப்பட்டார். அவர் சிக்கிம் எல்லையை மதிய அளவில் அடைந்து, அங்குள்ள ரேங்க்போ என்னும் இடத்தில், மாநில விருந்தினர் மாளிகையில் தங்கினார். மாஸ்டர் அவர்கள், ரேங்க்போவில் கலாச்சார முறைப்படி வரவேற்கப்பட்டார். பின்னர் ஒரு மணி நேர பயணத்தில், அவர் அங்குள்ள ரிசாட்(resort) -டை அடைந்தார். வழியில் சூழ்ந்திருந்த இயற்கை எழிலால் மிகவும் கவரப்பட்டதுடன், பாரம்பரிய கட்டிடங்களைக் கண்டு மிகவும் பாராட்டினார். அவர், அங்கு கூடியிருந்த உள்ளூர் அப்யாசிகளால் வாழ்த்தப்பட்டதுடன், மிகப்பரந்த முற்றத்தில் அமர்ந்து கொண்டு சூரிய ஒளியை அனுபவித்தார். மாஸ்டர் சிக்கிமில் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதை பார்க்க முடிந்தது. அவரே அதனை பலமுறைக் குறிப்பிட்டார்.

கருத்துப்பரிமாற்றலின்போது ஒருவர், மக்கள் சகஜ மார்க்கத்தில் சேர்ந்தாலும், விரைவிலேயே விலகி சென்று விடுவதாக கூறினார். அதற்கு மாஸ்டர், "அவர்கள் வரலாம், செல்லலாம், ஒருமுறை அவர்கள் இங்கு வந்துவிட்டால், அவர்கள் எங்கு செல்கிறார்கள் என்று பார்த்துக்கொள்வது என் பொறுப்பாகும்" என்று கூறினார்.

மாலை சத்சங்கத்தை தொடங்குவதற்கு முன்னர், அங்கு கூடியிருந்தவர்களிடம், "நீங்கள் அனைவரும் தயாரா?" என்று கேட்டார். அந்தக் கேள்வி, அவர் சிக்கிமில் தங்கியதன் நோக்கத்தை அறை கூவியது. இரவு உணவுக்குப் பின்னர், அவர் பாபுஜியுடனான தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

நான்காவது நாளானது, காலை 7:00 மணி சத்சங்கத்துடன் துவங்கியது. அன்று மாலை ஒரு சிறிய கலை நிகழ்ச்சிக்குப் பின்னர், அவர் அப்யாசிகளின் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு, அவர்களுடன் சேர்ந்து இரவு உணவருந்தி, மேலும் சில புராணக்கதைகளைக் கூறினார்.

சிலிகுரி



ரேங்க்போ



காங்டாக்



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

அவர், விருந்து ஏற்பாடு செய்ததமைக்காக சிக்கிம் அப்யாசிகளுக்கு நன்றி தெரிவித்ததுடன், பகவான் ராமர் மற்றும் கேவட் (படகோட்டி) பற்றிய கதையைக் கூறி, "எங்கள் உடலுக்கு உணவளித்ததால் உங்கள் அனைவரின் ஆன்மாவிற்கும் உணவு கிடைக்க நான் பிரார்த்திக்கிறேன்" என்றார்.

நவம்பர் 5 அன்று, மாஸ்டர் உள்ளூர் கடைவீதிக்கு சென்று சில புத்தகங்களை CREST நூலகத்திற்காக தேர்ந்தெடுத்தார். அவர் உள்ளூர் பிரசெப்டர் வீட்டில் சத்சங்கம் நடத்தியதுடன், அப்யாசிகளுடன் நேரத்தையும் செலவிட்டார். இது ஒரு அழகான நாளாக அமைந்தது. மேலும் ஒவ்வொருவரும் மிகவும் மகிழ்ச்சியடைந்ததுடன், அவரது தெய்வீக பிரசன்னத்தில் முழுமையாக நனைந்தனர்.

மாலை சத்சங்கத்திற்குப் பின்னர், மாஸ்டர், அனைத்து மனிதர்களுக்கிடையே, எந்தவிதமான தடைகளும் இருக்கக் கூடாது என்பதற்கு முக்கியத்துவம் அளித்து, தமது உரையை நிகழ்த்தினார். ஆன்மீகத்தில் எந்த வேறுபாடுகளும் இல்லை, அதில், உண்மையே அனைத்து ஜீவன்களுக்கும் அடிப்படை என்றும் கூறினார்.

நவம்பர் 6 அன்று, சிக்கிம்மில் இருந்து புறப்பட்டு, சிலிகுரியை அடைந்து, ஆசிரமத்திற்கான இடத்தில் சூரிய ஒளியின் கீழ் சத்சங்கம் நடத்தி, அங்கு கூடியிருந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார். மதிய உணவுக்கு பின்னர், அவர் கொல்கத்தாவிற்குச் சென்றார்.

## ஒரிஸ்ஸா

15 நவம்பர் அன்று, மாஸ்டர் கரக்பூரிலிருந்து புவனேஷ்வருக்கு, 350 கிமீ தூரம், சாலை வழியாக பயணம் செய்தார். சுமார் 11 மணியளவில், அவர் தம் குழுவுடன், ஒரிஸ்ஸாவில் உள்ள ஒரு சிறிய மையமான பத்ரக்-கை அடைந்தார். அவர் அங்குள்ள அப்யாசிகளை சந்தித்துவிட்டு புவனேஷ்வருக்கு கிளம்பும்முன், மதிய உணவும் எடுத்துக்கொண்டார்.

4:45 மணியளவில், புவனேஷ்வரில் உள்ள ஹோட்டலை அடைந்தார். கடும் மழையாக இருந்தபோதிலும் அவர் அப்யாசிகளால் சிறப்பாக வரவேற்கப்பட்டார். இது புவனேஷ்வருக்கு மாஸ்டரது முதல் பயணம் ஆகும்.

16 நவம்பர் அன்று, மாஸ்டர் ஆசிரமத்திற்கான இடத்திற்கு (ஒரிஸ்ஸாவின் முதல் ஆசிரமம்) சென்றார். அங்கு அவர் 350 அப்யாசிகளால் மிகப்பெரிய அளவில் வரவேற்கப்பட்டார். சத்சங்கத்திற்குப் பின்னர் அவர்தம் உரையில், "சந்தேகம் என்பது ஆன்மாவைப் பொருத்தவரையில் ஒரு விஷம் ஆகும். சில விஷயங்களைப் பற்றி சந்தேகம் கொள்ளுதல் கூடாது. உதாரணமாக, கடவுளின் இருப்பு போன்றவை. மேலும் பாபுஜி அவர்கள், அப்யாசிகளுக்கு குறிப்பாக வருங்கால அப்யாசிகளுக்கு, போதிய வாய்ப்பினை அளித்துள்ளார். அவர் கூறுகையில், "பயிற்சிமுறையை சோதி, உனது வருங்கால குருவை சோதி, மேலும் நீ சரியான ஒன்றை தேர்ந்தெடுத்துள்ளாய் என்ற திருப்தி வந்தவுடன், அவருடன் சேர்த்து உன்னை எஃகு கயிற்றால், முட்டாள்தனமாக அவரை விட்டு விலகிச் செல்லாவண்ணம் கட்டிக்கொள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

18 நவம்பர் அன்று, தியானக் கூடத்திற்கு 8:35 மணியளவில் வந்தார். அவர், மென்குரல்கள் புத்தகத்தின் பாகம்1, மற்றும் 2ல் உள்ள, பாபுஜியின் செய்திகள் பற்றி பேசினார். அவர், "இந்த செய்திகள்



'ஸ்ருதி' என்னும் அமைப்பினை சேர்ந்தவை, ஏனெனில் ஒருவர் கூட அங்கு சென்றதில்லை, அவை பற்றி நினைத்ததுமில்லை, எழுதியதும் இல்லை, தட்டச்சில் பதித்ததுமில்லை" என்று கூறினார். அவைகள் வந்தன, அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன மற்றும் அவைகள் எழுதப்பட்டன. ஆகையால் அவைகள் மிகப்பெரிய அளவில் கவனம் செலுத்த வேண்டிய தகுதி உடையவைகள் ஆகும் என்றார். மேலும் அவர், "நாம் கண்டிப்பாக நினைவில் கொள்ள வேண்டியது யாதெனில், சுதந்திரம் என்பது ஆன்மாவின் சுதந்திரமே. அதுவே இருந்ததும், இருப்பதும் மற்றும் எதிர்காலத்தில் இருக்க வேண்டியதும் ஆகும். அந்த சுதந்திரத்தை நாம் சம்பாதித்து அடைதல் வேண்டும். ஏனெனில், ஒரு வகையில் ஆன்மாவானது துரதிர்ஷ்டவசமாக இரத்தம் மற்றும் சதைகளாலான இந்த உடலில் சிறை வைக்கப்பட்டுள்ளது" என்றும் கூறினார்.

அதன்பின்னர், அவர் சத்சங்கம் நடத்தி, அப்யாசிகளுடன் சிறிது நேரத்தைச் செலவிட்டு, அவர்களின் கேள்விகளுக்கும் பதில் அளித்தார். மறுநாள் மாஸ்டர், விமானம் வாயிலாக சென்னை புறப்பட்டார்.

## பெங்களூர்

28 நவம்பர் அன்று, காலை உணவிற்குப் பின்னர், 8:30 மணியளவில், மாஸ்டர் சென்னையிலிருந்து புறப்பட்டு, சுமார் 11:45 மணிக்கு நாட்ராம்பள்ளியை அடைந்தார். அங்கு அவர் சுமார் 800 அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்திவிட்டு, மதியம் 1:30 மணிக்குப் புறப்பட்டு, பெங்களூரிலுள்ள பரம்தாம் ஆசிரமத்தை அடைந்தார்.

மாஸ்டர் அவர்கள், ஞாயிற்றுக்கிழமை காலை சத்சங்கத்திற்கு முன்னர், "இன்று முதல், ஒளி உலகிலிருந்து மென் குரல்கள் மூன்றாம் பாகத்திற்கான முன்பதிவு ஆரம்பிக்கிறது. இதுபோல் வருடத்திற்கு ஒன்று வீதம் மொத்தம் 12 பாகங்கள் வெளிவரவிருக்கின்றன" என்று கூறினார். அதனைத் தொடர்ந்து சத்சங்கம் நடத்தினார்.

டிசம்பர் 3 வியாழனன்று, மாஸ்டர் CREST-க்கு புறப்பட்டுச் சென்றார். அவர், அங்கு நடைபெற்றுக்கொண்டிருந்த, சாதனா நிகழ்ச்சியில் இடம்பெற்றிருந்த, 40 பங்கேற்பாளர்களால் வரவேற்கப்பட்டார். மாலை வேளையில், கோல்ப் சக்கர வண்டியில், வழியெங்கும் மகிழ்ச்சியுடன் குழுமியிருந்த அப்யாசிகளுக்கிடையே, வளாகத்தைச் சுற்றி வந்தார்.

சிலிகுரி



புவனேஷ்வர்





ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்




பெங்களூர்



திப்தூர்

4-ஆம் தேதியன்று, சாதனா நிகழ்ச்சியின் நிறைவுவிழாவில் மாஸ்டர் கலந்துகொண்டு, ஒவ்வொருவருக்கும் நேரிடையாக சான்றிதழ் வழங்கினார். சில பங்கேற்பாளர்கள், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சியையும், மாஸ்டரின் அருகாமையால் ஏற்பட்ட மகிழ்ச்சியையும், தங்களது கருத்துக்கள் மூலம் வெளிப்படுத்தியதை, மாஸ்டர் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்தார். பின்னர் அவர், "கோட்பாடுகள் - செயல்முறைகள் என்று, இந்த நிகழ்ச்சி ஒரு ஏணியின் மீது படிப்படியாக மேலே செல்வதைப் போலுள்ளதைப் பாருங்கள்" என்று கூறினார். மேலும் அவர், "இங்கு விரும்பும் நபர்களுக்கு, பயிற்றுவிக்கத் தேவையான வசதிகள் அமைந்திருப்பதில், நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்" என்று கூறியதுடன், விருப்பம் மட்டுமே போதாது என்றார். பயிற்சியாளர்கள் இங்கு கற்றுக்கொண்டவற்றை நடைமுறைப்படுத்த விருப்பம் கொண்டுள்ளார்களா? என்றும் வினவினார்.

சனிக்கிழமை அன்று, CREST-ல் கர்நாடகாவைச் சேர்ந்த பிரசெப்டர்களுக்கான கருத்தரங்கை, பிரசெப்டர்கள் தங்கள் இதயங்கள்மூலம் செயலாற்ற வேண்டும் என்பதை ஊக்குவிக்கும்படியான ஒரு உரையுடன், துவக்கிவைத்தார். அங்கு வெளிநாடுகளிலிருந்து வந்திருந்தவர்கள் உட்பட சுமார் 145 பிரசெப்டர்கள் குழுமியிருந்தனர்.



தும்கூர்

## திப்தூர்

மாஸ்டர், டிசம்பர் 6 ஞாயிற்றுக்கிழமையன்று, CREST-லிருந்து சுமார் 8 மணியளவில், திப்தூர் புறப்பட்டார். பெங்களூரிலிருந்து வடமேற்கில் 160கிமீ தொலைவிலுள்ள திப்தூர், சுமார் 90 அப்யாசிகளைக் கொண்டுள்ளது. இது மாஸ்டரின் மூன்றாவது திப்தூர் பயணம் ஆகும். மேலும், தியானக்கூடம் மற்றும் இதர கட்டுமானப் பணிகள் முடிந்த பிறகு, அவர் செல்லும் முதல் பயணமுமாகும். அங்கு வந்தவுடன், மாஸ்டர், மாலை 5 மணி, 9 மணிக்கு சத்சங்கங்கள் நடக்கும் என்று அறிவித்ததுடன், அவ்விரண்டையும் அவரே நடத்தினார். பெங்களூர் மற்றும் அருகிலிருந்த மையங்களைலிருந்து, சுமார் 1000 அப்யாசிகள், மாஸ்டரின் பிரசன்னத்தில் இருப்பதற்காக அங்கே கூடியிருந்தனர்.

மறுநாள் காலையில் மாஸ்டர், கடைசி சிட்டிங் கொடுத்தபின்னர், சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு, தும்கூர் புறப்பட்டார். தும்கூர் அப்யாசிகள், மாஸ்டரின் வருகைக்காக மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். மாஸ்டர் அங்கிருந்த நேரம் முழுவதும், நல்ல மனநிலையில், மகிழ்ச்சியுடன் இருந்ததுடன், நீண்ட நேரம் பாபுஜி பற்றியும், மஹாபாரதத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார். மேலும் அவர், "நாம் இருட்டில் இருக்கும்வரையில்தான் இருளைப் பார்த்துக்கொண்டிருப்போம். அவற்றிலிருந்து எப்படி விடுபடுவது? அவற்றிலிருந்து வெளியே வந்து விடு" என்று கூறினார்.

மாஸ்டர் மதிய உணவிற்குப் பின்னர், தும்கூரிலிருந்து கிளம்பி, 4:30 மணியளவில் பெங்களூரை அடைந்தார். காபி அருந்தியவுடன் அவர், நேராக பரம்தாம் சென்று, அங்கு சத்சங்கம் நடத்தினார். அதிகமான வேலைகள் காரணமாக, இரவில் நீண்ட நேரம் பணியாற்றியதால், பெங்களூரில் மேலும் ஒரு நாள் தங்க முடிவுசெய்து ஓய்வெடுத்துக்கொண்டார்.

## திருப்பூர்

9ஆம் தேதியன்று, காலை 6 மணியளவில் பெங்களூரிலிருந்து புறப்பட்டு, 7:30 மணியளவில் கிருஷ்ணகிரியை அடைந்தார். காலையுணவிற்குப் பின்னர், 9 மணிக்கு சத்சங்கம் நடத்தினார். அவர் ஈரோட்டில் மதியவுணவிற்காக நின்றுவிட்டு, ஒரு சிறு ஓய்விற்குப் பின்னர், திருப்பூரிலுள்ள டைமண்ட் ஜுபிளி பார்க்கை அடைந்தார். வந்து சேர்ந்தவுடன் தேநீர் அருந்திவிட்டு, பாபுஜி தன்னிடம், "நீ தேநீர் அருந்திவிட்டாய். இனி உன் வேலையைத் தொடங்கலாம்" என்று கூறுவதாக குறிப்பிட்டார். அவர் உடனே தியானக் கூடத்திற்குச் சென்று, 6:15 மணிக்கு சத்சங்கம் நடத்தினார். பின்னர் மாஸ்டர், அடுத்து வரும் மூன்று நாட்களில், தினமும் மூன்று சத்சங்கங்கள், காலை 6:30 மணி, 11:00 மணி மற்றும் மாலை 5:30 மணிக்கு நடைபெறும் என்று அறிவித்தார்.



திருப்பூர்

அங்கு, கேரளா மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 4000 அப்யாசிகளும், மற்றும் குஜராத்தைச் சேர்ந்த பிரசெப்டர்களும் இருந்தனர். அது அனைத்து வசதிகளும் அமைந்த, ஒரு பண்டாரா போன்ற சூழலைக் கொண்டிருந்தது. மாஸ்டர் அவர்கள், தாமே மூன்று சத்சங்களையும் தியானக்கூடத்தில் நடத்தினார்.

11 ஆம் தேதியன்று, மாஸ்டர் காலை 6:30 மணி மற்றும் 11 மணிக்கு, சத்சஙகம் நடத்தினார். மதியம் அவர், நகரில் அமைந்திருந்த ஒரு அப்யாசியின்





மலம்புழ



கோயம்பத்தூர்

இல்லத்திற்கு சென்றுவிட்டு, அன்றைய தினத்தின் கடைசி சத்சங்கத்தை 5.30 மணியளவில் நடத்த, சரியான தருணத்தில் திரும்பினார்.

மாஸ்டர் 12ம் தேதி, மூன்று சத்சங்கங்களையும் தியானக்கூடத்தில் நடத்தி வைத்தார். 13ம் தேதி காலை சத்சங்கம் நடத்திய பின், அவர் கோயம்புத்தூருக்கு புறப்பட்டுச் சென்றார். 11 மணி அளவில் அங்கு வந்தடைந்த பின், அவர் சிறிது நேரம் ஓய்வெடுத்தார். பிறகு அவர் வெளியில் வந்தமர்ந்து, அப்யாசிகளுடன் சிறிது நேரம் செலவழித்தார். அதன் பின் அவர் மலம்புழாவிற்கு புறப்பட்டுச்சென்றார்.

14ம் தேதி, மலம்புழாவில் சிறிது நேரம் அமைதியாகக் கழித்து, மதிய உணவிற்குப் பின், கோயம்புத்தூருக்கு புறப்பட்டு, ஒரு அப்யாசியின் இல்லத்திற்கு, மாலை 3 மணி அளவில் வந்து சேர்ந்தார். இரவு உணவிற்கு முன்னும், பின்னும் அவர் அப்யாசிகளுடன் அளவளாவியது, அப்யாசிகளின் மனதிற்கு மிகவும் நிறைவாக இருந்தது.

15ம் தேதி இரவு உணவிற்கு முன், அவர் அறையில் அமர்ந்து, பல்வேறு விஷயங்களைப்பற்றி பேசினார். இந்து மதத்தின் தூண்களான வேதங்கள், பிரம்மசூத்திரம், பகவத்கீதை முதலானவை பற்றியும், மற்றும் ஆயுர்வேதா, யுகங்கள், நேரத்தின் தன்மை பற்றியும், மாஸ்டரின் பிரியமான தலைப்பான 'விஞ்ஞானக் கதைகள்' பற்றியும், ஐன்ஸ்டைனின் பரிசோதனைகள், ஐசக் அசிமாவின் "அஸ்திவாரம்" (foundation) பற்றியும் பேசினார். உரையாடலின் சாராம்சங்கள்:

எண்ணங்கள் தங்களிடம் சுய வலிமை கொண்டிருக்கவில்லை. ஆனால் அவை செயல் திறனை உசுப்பிவிடும் தன்மை வாய்ந்தவை எனக்குறிப்பிட்டார். சுய முயற்சியாலான செயல் திறன், இறைவனிடம் வேண்டிப்பெற்ற செயல் திறன் இவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை தெளிவாக்கினார்.

ஒளி, ஓரிடத்தை அடைய நேரம் எடுத்துக்கொள்கிறது. உதாரணமாக, சூரிய ஒளி பூமியை அடைய, 8 நிமிடம் ஆகிறது. நாம் எப்பொழுதும் நம் கண்களால் பார்ப்பது கடந்த காலத்தையே. நிகழ்கால ஒளியை அல்ல.

இந்நிகழ்ச்சி, ஒவ்வொரு அப்யாசியையும் வெவ்வேறு பரிமாணங்களில் விழிப்புறச் செய்தது. 16ம் தேதி மாலை 4:30 மணி அளவில், மாஸ்டர் சென்னைக்குப் புறப்பட்டுச்சென்றார்.

## சென்னை

சென்னை வந்தபின், மாஸ்டர் நிர்வாக வேலைகளில் ஆழ்ந்திருந்தார். உலகமெங்கிலுமிருந்து, சுமார் 200 அப்யாசிகள், கிறிஸ்துமஸ் விழாவைக்கொண்டாட மணப்பாக்கம் ஆசிரமத்தில் குழுமியிருந்தனர். டிசம்பர் 24ம் தேதி மாலை, மாஸ்டர் கிறிஸ்துமஸ் கேக் வெட்டினார். அப்யாசிகள் கிறிஸ்துமஸ் பாடல்களை பாடினர். மாஸ்டருடன் இருப்பது, கிறிஸ்து பிரானுடன் இருப்பதை போன்ற உணர்வை தோற்றுவிப்பதாக ஒரு அப்யாசி குறிப்பிட்டார். மாஸ்டர் அதைக்கேட்டு அன்புடன் புன்னகைத்தார். ஆசிரமம் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருந்தது.

31ம் தேதி மாலை, மாஸ்டர், பயிற்சி பெறுபவர்களுடன் சிறிது நேரம் செலவழித்தார். அவர்கள் இரு வாரமாக இந்தியாவில் உள்ளனர். கரக்பூரில் இருவார பயிற்சிக்குப்பின், இரண்டாம் கட்ட பயிற்சிக்காக சென்னை வந்துள்ளனர்.

ஜனவரி 1ம் தேதி காலை, மாஸ்டர் புத்தாண்டின் முதல் சத்சங்கத்தை நடத்திவைத்தார். பின் சகோ. கமலேஷ் படேல், மாஸ்டரின் சமீபத்திய பேச்சுக்களின் டிவிடி தொகுப்பை வெளியிட்டார்.

புதுவருட முதல் சொற்பொழிவில், மாஸ்டர் பின் வருமாறு உரையாற்றினார்.

"சகோதர சகோதரிகளே! நாம் அனைவரும் நம் இதயத்தின் ஆழத்திலிருந்து வரும் குரலுக்கு மிகுந்த கவனமுடன் செவிமடுக்கவேண்டும். தேவைப்பட்டால், வெளி உலகிற்கு காதை பொத்திக்கொள்ளுங்கள். கண்களையும் மூடிக்கொள்ளுங்கள். வெளி உலகிற்கு செவிமடுக்காதீர்கள். கடவுள் நமக்கு அளித்த ஐம்புலன்களையும் வெளியே பரவ விடுவதற்கு பதிலாக உள் நோக்கி செலுத்துங்கள். இம்மாதிரி செய்யாவிடில், ஆன்மீகம் படிப்பதற்கும், விவாதிப்பதற்கும், பயிற்சி பெறுவதிற்கும் ஏற்ற ஏட்டுச்சுரைக்காயாய் இருக்குமேயன்றி, நம் முன்னேற்றத்திற்கு ஒருபோதும் உதவாது. நாம் இருந்த இடத்திலேயே தான் இருப்போம்".

ஜனவரி 4 மற்றும் அம் தேதிகளில், மாஸ்டர் பல திருமணங்கள் நடத்தி வைத்தார். ஜனவரி 15ம் தேதி, தில்லி வழியாக அவர் சத்கோலுக்குக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

கிறிஸ்துமஸ்



பயற்சி பெறுபவர்களுடன்



சென்னையில் புத்தாண்டு



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## வருடச்சந்தாக்கள்

1. தயவு செய்து வருடாந்திர சந்தாக்களை 'Spiritual Hierarchy Publications Trust' Admin Building, BMA, SRCM, Manappakkam, Chennai- 600116, என்ற முகவரிக்கு அனுப்பவும்.

உ. வருடாந்திர சந்தாக்கள், நிதியாண்டை ஒட்டிய விதமாக, ஏப்ரல் இதழிலிருந்து ஆரம்பித்து, அடுத்த ஜனவரி இதழுடன் முடிவுறும்.

### பத்திரிகைகள்

| | |
|---|---|
| Constant Remembrance | ரூ. 300/- |
| காலாண்டு பத்திரிகைகள் - ஹிந்தி/தமிழ்/தெலுங்கு/கன்னடம்/குஜராத்தி/மலையாளம்/பெங்காலி | ரூ. 100/- |

### ஆயுள் சந்தாக்கள்

தயவு செய்து சந்தாதார் படிவத்தையும், SHPT நன்கொடை படிவத்தையும், பணத்துடன் சேர்த்து, Managing Trustee, Spiritual Hierarchy Publication Trust, 'Divine Bliss', North Block, 7A, 2/3. Judges Court Road, Kolkatta- 700027 (W.B.) India, என்ற முகவரிக்கு அனுப்பவும்.


### ஆயுள் நிரந்தர நிதி சந்தாக்கள்- புத்தகங்கள் மற்றும் ஒலி/ஒளி தகடுகள்

| | |
|---|---|
| ஆங்கிலம் | ரூ. 6000/- |
| ஹிந்தி | ரூ. 4500/- |
| மராத்தி/தமிழ்/தெலுங்கு/கன்னடம்/குஜராத்தி/மலையாளம் | ரூ. 3000/- |
| ஒலி/ஒளித்தகடுகள் | ரூ. 25000/- |

### ஆயுள் நிரந்தர நிதி சந்தாக்கள்- பத்திரிகைகள்

| | |
|---|---|
| Constant Remembrance | ரூ. 3000/- |
| ஹிந்தி - சகஜ மார்க்கம் | ரூ. 2000/- |
| காலாண்டு பத்திரிகைகள்- தமிழ்/தெலுங்கு/கன்னடம்/குஜராத்தி/மலையாளம் | வ. 1500/- |


## புதிய வெளியீடுகள்





கான்ஸ்டண்ட் ரிமெம்ப்ரென்ஸ்
ஜனவரி 2010




சத்யோதயம்
(மறு பதிப்பு) தமிழ்





உள்ளத்தை வெளிப்படுத்துதல்




ஹியர் அண்ட் நௌ
டிவிடிக்கள்

## கடந்த காலத்தின் ஒரு கண்ணோட்டம்

இப்புதுப்பகுதியில், பூஜ்யஸ்ரீ லாலாஜிமஹராஜின் காலத்திலிருந்து ஆரம்பித்து, மாஸ்டர்களின் மேற்கோள்களையும், அவர்கள் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளையும், நம் மிஷனின் புத்தகங்களிலிருந்தும், இதழ்களிலிருந்தும் எடுத்து அளிக்கப்படுகிறது. இவ்விதழில், 60 வருடத்திற்கு, அதாவது 1950ம் வருடத்திற்கு முந்திய நிகழ்வுகளை அளிக்கிறோம். இதை நீங்கள் நன்கு அனுபவிப்பீர்கள் என நம்புகிறோம்.



பூஜ்யஸ்ரீ லாலாஜிமஹராஜ், பல பகுதிகளுக்கும் சென்று, தன்னோடொத்தவர்களை சந்தித்தார். அது போலவே பல அப்யாசிகளும் அவரது இல்லத்திற்கு வந்து தங்கினர். அவர் அப்யாசிகளுக்கு எழுதிய கடிதங்களில், பிருந்தாவன், ஈடா, கான்பூர், மயின்புரி மற்றும் ஒரை முதலிய இடங்களுக்கு சென்றதாக குறிப்பிட்டிருந்தார்.

அவர் கடிதங்கள், மற்றும் எழுத்துக்களிலிருந்து எடுக்கப்பட்ட சில முத்துக்கள்:

### டிசம்பர் 1929

லாலாஜி, பாபூஜிக்கு எழுதிய கடிதத்திலிருந்து: "மனவேதனை அடைவது நல்லதிற்கே. சகிப்புத்தன்மை, அடக்கம் போன்ற குணங்களை பெற ஒரு பள்ளியாக வீடு அமைகிறது. ஒரு விதமாக யோசித்தால், பொறுமை என்பது ஒரு தவம். அது மற்ற தவங்களை விட மேலானது. ஆகையால் மற்றவர்களிடம் மனக்குமுறல் கொள்வது, துக்கப்படுவது போன்றவற்றை விட்டு விட்டு, தன் மீது தவறு இல்லாவிட்டாலும் கூட, நாமே தான் தவறு செய்தோமென எண்ண வேண்டும்."

### ஏப்ரல் 1930

லாலாஜியின் மற்றொரு கடிதம்:
"பெரும்பாலானவர்கள், பூஜையை ஒரு சடங்காகவே செய்கிறார்கள். ஒரு உண்மையான, உள்ளார்ந்த தேடலுக்கு தேவையான தாபமோ, வேதனையோ, இருப்பு கொள்ளாத தன்மையையோ கொண்டிருக்கவில்லை. அப்படி இருந்திருந்தால் அவர்கள் தம் உள்ளார்ந்த தன்மையை உணர்ந்திருப்பார்கள். ஒவ்வொரு நாளும் ஒரு புது வாழ்க்கை அவர்களுக்குள் பிரவகிக்கும்."

ஆதாரம்: Autobiography of Ram Chandra Vol-1 (1899-1932)/ Complete Works of Ram Chandra Vol-3



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# Ashram Updates

## லக்னோ ஆசிரமம் - தியானக்கூடம்

லக்னோ IIM சாலையிலுள்ள, பாபூஜி நினைவு ஆசிரமத்தில், தியானக்கூடத்தின் கட்டுமானப்பணி தொடங்கப்பட்டது. இக்கூடம் 30மீ X 48மீ பரப்பளவை கொண்டிருக்கும். இதில் சுமார் 3000 அப்யாசிகள் அமர்ந்து கொள்ளலாம். இது எஃகு சட்டத்தினால் உருவாக்கப்படுகிறது.

சகோ. உமாசங்கர், செயலாளர், SRCM, நவம்பர் 11ம் தேதியன்று, அடிக்கல் நாட்டினார். மார்ச் 2010ல் இக்கூடம் கட்டி முடிக்கப்படுமெனத் தெரிகிறது.

## வாரணாசி

சாரநாத்தில், லயயோகாஆசிரமத்தின் கட்டிட வேலை, நவம்பர் 2ம் தேதி, சகோ.உமாசங்கரால் துவக்கிவைக்கப்பட்டது. பிப்ரவரி 16, 2006ம் வருடம், இதற்கு மாஸ்டர் அடிக்கல் நாட்டியிருந்தார்.

இத்தியானக்கூடம், எண்கோண வடிவில், சுமார் 8000 சதுர அடி பரப்பளவு கொண்டது. ஒரே நாளிலேயே, 8 தூண்களின் அஸ்திவாரத்திற்கான பள்ளங்கள் தோண்டப்பட்டுவிட்டன.

## சிரக்காரா, கொல்லம், கேரளா

மாஸ்டர், சமீபத்தில் திருப்பூர் சென்றிருந்த போது, சிரக்கரா, கொல்லம் ஆசிரமத்திற்கு, "தபோவனம்" என பெயரிட்டார். இவ்வாசிரமம், 2/2/2008ல் இருந்து செயல்பட்டு வருகிறது. கேரளாவின் பல பகுதிகளிலிருந்தும், திருவனந்தபுரம், பத்தினம்திட்டா, ஆலப்புழா மாவட்டங்களிலிருந்தும், அப்யாசிகள் இங்கு வருகின்றனர். 'தபோவனம்' ஆசிரமம், கொல்லத்திலிருந்து தெற்கு திசையில் 25 கி.மீ தூரத்திலும், திருவனந்தபுரத்திலிருந்து வடக்கு திசையில் 45 கி.மீ தூரத்திலும், தேசிய நெடுஞ்சாலை NH-47ல் அமைந்துள்ளது. கிராமீயச்சூழ்நிலையில், ஏராளமான தெகூனை, மற்றும் இதர மரங்கள், வயல்வெளிகள், மற்றும் முன்னால் ஓடும் தெள்ளிய நீரோடை, என்ற ரம்மியமான சூழலில் இவ்வாசிரமம் அமைந்துள்ளது. சுமார் 150 அப்யாசிகள், வட்டாரக் கூட்டத்திற்கு வருகை புரிகின்றனர். மாதத்தின் முதல் ஞாயிறு, முழு நாள் நிகழ்ச்சியாக நடத்தப்படுகிறது. குழந்தைகள் மையத்தில், VBSE பயிற்சி திட்டமும் நடத்தப்படுகிறது. மாஸ்டரால் புனிதப்படுத்தபட்ட இந்த ஆசிரமத்திற்கு வருகை புரியுமாறு, அப்யாசிகள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

## மண்டல ஆசிரமம், கோரக்பூர்

டிசம்பர் 2 ம் தேதியன்று, சகோ.உமாசங்கர், ஆசிரத்தின் நிலத்தில் அடிக்கல் நாட்டினார். கோரக்பூர் மற்றும் அருகிலுள்ள மையங்களிலிருந்து, சுமார் 150 அப்யாசிகள், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தியானக்கூடம், அடுத்த வருடம் வசந்த பஞ்சமிக்குள் தயாராகி விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆசிரமம், பசுமை நிறைந்த சாகுவ மரங்கள் அடர்ந்த, குஷ்ம்ஹி காட்டின் முன்னால் அமைந்துள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் பேசிய சகோ.உமாசங்கர், ஆசிரமங்கள் எல்லாம் ஒளிமையமே என்றும், ஒவ்வொரு அப்யாசியும் மாஸ்டரின் பிரசன்னத்தை உணர்கிறார் என்றும் கூறினார். இப்பணியில் பங்கேற்க, அவர் அப்யாசிகளை அழைத்தார். மாஸ்டரின் புகழ் பெற்ற "சேவை செய், சேவை செய்யப்படுவாய்"என்ற சொற்றொடரை மேற்கோள் காட்டினார்.

லக்னோ



வாரணாசி



சிரக்காரா



## இளைஞர் நிகழ்ச்சி-ஹூப்ளி, வட கர்நாடகா

ஒலி/ஒளி அணுகுமுறை மூலம், இளைஞர்களுக்கான அறிமுகத்திட்டம், ஹூப்ளி நகரில், 25/10/09 அன்று நடத்தப்பட்டது. 15 அப்யாசிகளும், அவர் தம் நண்பர்கள் சுமார் 25 பேரும், கலந்து கொண்டனர்.

இத்திட்டம், கீழ் கண்ட தலைப்புக்களில் அவர்களுக்கு விழிப்புணர்வு பெற உதவி செய்தது.

தலைமை எற்பது, செவிமடுக்கும் கலை, தனக்குரிய குணங்களை வளர்த்துக்கொள்ளுதல், நற்பண்புகளை வளர்த்துக்கொள்ளுதல், உறவு முறை, முன்னுதாரணம், கருத்துக்கள பகிர்ந்து கொள்ளுதல், ஒன்றை அடைய ஆர்வம், அதை குறிக்கோளுடன் தேடுதல், இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளைப்பற்றியும், தியானம் மூலம் எவ்வாறு மனதை சீராக்கலாம் என்பதைப்பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

தேவைப்பட்டபோது, மாஸ்டரின் ஒலி/ஒளி தகடு ஒளிபரப்பப்பட்டது. இத்திட்டம் அவர்களிடையே, பெற்றோர், சமுதாயம், எல்லாவற்றையும் விட தன் மீதே பொறுப்புணர்வு கொள்ள ஊக்குவித்தது. இது, அவர்களை, எதிர் காலத்தின் பாதிப்புக்களை எதிர்கொள்ளவும் தயார் செய்தது.



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்



# பிரசெப்டர்களின் பயிற்சி

சமீபத்தில் நடந்த, பிரசெப்டர்களுக்கான அநேக பயிற்சி முகாம்களில், மாஸ்டர் கலந்து கொண்டு ஆசீர்வதித்தார். மாஸ்டரின் பேச்சுக்களாலும், சத்சங்கத்தினாலும் பிரசெப்டர்கள் மிகுந்த பயனடைந்தனர். அவர்களுக்கு ஊக்கமூட்டும், உற்சாகத்துடன் செயல் படும் அனுபவத்தை மாஸ்டரின் பிரசன்னம் ஊட்டியது.

## குஜராத்



குஜராத்தின் 75 பிரசெப்டர்களுக்கு, டிசம்பர் 10 லிருந்து 14 வரை திருப்பூர், கோயம்புத்தூர், மலம்புழா புத்துணர்ச்சி மையம், முதலிய இடங்களில், மாஸ்டருடன் சேர்ந்திருக்கும் வாய்ப்பு கிட்டியது. மாஸ்டர் தினமும் அவர்களுக்கு மூன்று சிட்டிங்குகள் அளித்தார். ஒவ்வொருவரும் நல்ல அப்யாசியாக உருவாக, கீழ்க்கண்டவைகளை மாஸ்டர் வலியுறுத்தினார்:

- உள்முக நோக்கு
- அடுத்தவரை புரிந்து கொள்ள பொறுமையாக செவி மடுத்தல்
- அடுத்தவரை கேலி/நிந்தனை செய்யாது, அவரின் நற்பண்புகளை அறியும் திறனை வளர்த்துக்கொள்ளுதல்
- எதைச்செய்தாலும் பொறுமையை கடைப்பிடித்தல்

## கர்நாடகா

5/12/2009 அன்று, பெங்களூரு CRESTல், 140 பிரசெப்டர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் மாஸ்டர் பேசும் போது, கர்நாடகத்தில், சகஜ மார்க்கத்தை பின்பற்றுவதில் தொய்வு இருப்பதை சுட்டிக்காட்டினார். அவர், பக்தியில்லாமை பற்றிக் குறிப்பிட்டு, பிரசெப்டர்கள் புது மையங்களுக்குச்சென்று, மிஷனின் இதய நாளங்களை சீராக்கவேண்டிய தேவையை உணர்த்தினார்.



## ஆந்திரபிரதேசம்

சென்னை, பாபூஜி நினைவு ஆசிரமம், டிசம்பர் 25-27 ஆகிய நாட்களில், ஆந்திர பிரதேச பிரசெப்டர்களின் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தது. அரசியல் நிலை காரணமாக, பல போக்குவரத்து சங்கடங்கள் இருந்தாலும், 180 பிரசெப்டர்களுக்கு மேல் இதில் கலந்து கொண்டனர். பிரசெப்டர்களின் பணி, நற்குணம், விஸ்பர்ஸ், சகஜ மார்க்கம்-ஒரு வாழும் முறை, போன்ற தலைப்புக்களில் பங்கேற்றவர்கள் பேசினர். அதனூடேயே கலந்துரையாடலும், சிந்தனை செய்வதும் நடைபெற்றன. ஞாயிறு 11 மணி அளவில், யாவரும் மகிழ்ச்சியுறும் வண்ணம், மாஸ்டர் அவர்களுடன் ஒரு மணி நேரத்திற்கு மேல் அமர்ந்து அளவளாவிக்கொண்டிருந்தார். அதன் பின் சிட்டிங் கொடுத்தார்.

## மஹாராஷ்ட்ரா



மஹாராஷ்ட்ராவின் 50 பிரசெப்டர்கள், நவம்பர் 13-15 இரண்டு நாட்கள், பூனாவில் கூடினர். முதலில் ஒரு அப்யாசி, ஒழுங்கு முறையான சாதனையின் முக்கியத்துவம், அப்யாசிகளுக்கு சிட்டிங் கொடுத்தல், மிஷனின் பணிகளும் வெளியீடுகளும் என்ற தலைப்புக்களில் கலந்துரையாடல் நடைபெற்றன. புது பிரசெப்டர்கள் இதனால் ஊக்கமடைந்து, தங்கள் பணியில் மேலும் தங்களை அர்ப்பணித்துக்கொள்ளும் திட நம்பிக்கையுடன், திரும்பிச் சென்றனர்.

# வரவேற்புக்கூட்டம், மும்பை, மஹாராஷ்ட்ரா

அணுசக்தி நகர், மும்பைவாசிகளுக்கு, நவம்பர் 8, 2009 அன்று, Homi Bhabha Centre for Science Education என்ற இடத்தில், SRCM, ஒரு வரவேற்புக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது. சுமார் 120 பேர் இதில் கலந்து கொண்டனர். சகோதரி. தாரேஷ்வர் SRCM பற்றியும், சகஜமார்க்க தியானமுறை பற்றியும், ஒரு முன்னுரை அளித்ததுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. மாலையில், "உள்தேடலின் விஞ்ஞானம் - இயற்கை பாதையின் மூலம் ஆய்வு" என்ற தலைப்பில் பேசப்பட்டது.

சகோ. A.P. துரை, இணைச்செயலாளர், SRCM, பொருள் சார்ந்த வாழ்க்கையையும், ஆன்மீக வாழ்க்கையையும், தியானம் மூலம் எவ்வாறு சமச்சீராக கொண்டு போக முடியும் என்பதை விளக்கினார். சகோ.பாட்டியா பேசும் பொழுது, எப்படி அவர் சகஜ மார்க்கத்தில் சேர்ந்தார் எனவும், அது எவ்வாறு தன் வாழ்க்கையில் மாற்றங்கள் கொண்டு வந்ததெனவும் விவரித்தார். பங்கேற்றவர்களில் சிலர், உடல் நலக்கோளாறுகள், மற்றவருடன் உறவு முறையில் சிக்கல்கள் போன்றவற்றில், சகஜமார்க்கம் எவ்வாறு பயன்படுமென அறிய முற்பட்டனர்.

கடைசியாக, 'Instant Liberation' என்ற மாஸ்டரின் ஒளித்தகடு திரையிடப்பட்டது. இது, பங்கேற்றவர்களுக்கிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. பங்கேற்றவர்களில் 22 பேர் சகஜ மார்க்கத்தில் சேர்ந்து, தியான முறையை பின் பற்ற தொடங்கி விட்டனர்.



ஜெய்பூர்



போபால்



இந்தூர்

## அப்யாசி பயற்சி நிகழ்ச்சி

2009, நவம்பர் 22 அன்று, புதிய அப்யாசிகளுக்கான அரை நாள் பயிற்சி நிகழ்ச்சி ஒன்று, ஜெய்பூர் மையத்தில் நடைபெற்றது. பயிற்சியைப் பற்றிய பல்வேறு தலைப்புக்களில் உரைகளும், வினா - விடை பகுதியும் இருந்தன. பங்கேற்ற சுமார் 30 புதிய அப்யாசிகள், நிகழ்ச்சி மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்றும், ஒரு புதிய அப்யாசி, மிஷன், மற்றும் அதன் பல்வேறு செயல்பாடுகளைப்பற்றித் தெரிந்துகொள்ள, இம் மாதிரி நிகழ்ச்சிகளில் கண்டிப்பாகப் பங்கேற்க வேண்டும் என்றும் கூறினர்.

2009, நவம்பர் 27 முதல் 29 வரை, போபால் ஆசிரமத்தில், ஒரு அப்யாசி பயிற்சி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆசிரமத்தின் அமைதியான சூழலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சுமார் 50 அப்யாசிகள் பங்கேற்றனர். பயிற்சியாளர்களின் கருத்துரைகள், மற்றும் வினா - விடைப் பகுதிகளால், பங்கேற்பாளர்களின் சாதனாவைப்பற்றிய பல சந்தேகங்கள் தெளிவாக்கப்பட்டன. சகோதரத்துவமும், ஒத்திசைவும் இணைந்த ஒரு சூழல் அங்கு இருந்தது. பயற்சியை ஒழுங்காகச் செய்யும் தீர்மானத்துடன், பங்கேற்றவர்கள் அனைவரும் திரும்பிச் சென்றனர்.

கடந்த ஒரு வருடத்தில், மிஷனில் சேர்ந்தவர்களுக்காக, நவம்பர் 29 அன்று, ராஞ்சி ஆசிரமத்தில் முதன்முறையாக, அப்யாசி பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது. சகோ.திவாரி நிகழ்ச்சியைத் தொகுத்தளித்தார். பயிற்சி நிகழ்ச்சியின் பல்வேறு அம்சங்களை, ஸ்ம்ருதி உருவாக்கியுள்ள ஒலி - ஒளி அமைப்பு உதவியுடன், சகோ.லால், சகோ. தனேஜா, சகோ. சாஹூ, சகோ. மிஸ்ரா, மற்றும் சகோதரி திவாரி ஆகியோர் விவரித்தனர். ஒலி-ஒளி வடிவமைப்பிலான மாஸ்டரின் உரைகள், மிஷன் மற்றும் சாதனாவின் பல்வேறு பகுதிளைப்பற்றிய தெளிவான எண்ணத்தை ஏற்படுத்தியதால், அவை, பங்கேற்பாளர்களால் மிகவும் வரவேற்கப்பட்டன.

டிசம்பர் 6 அன்று, மத்தியப்பிரதேசம், இந்தூர் மையத்தில், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது, சமீபத்தில் மாஸ்டருடன் பயணம் செய்த அப்யாசிகளும், பலவிதமான பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களும், தங்கள் அனுபவங்களை அனைவருடனும் பகிர்ந்து கொண்டனர். பெங்களூரு, CRESTல் ஒரு பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சகோ. ஆப்தே, அதனைப்பற்றி விரிவாகக் கூறியதுடன், அனைவரும் அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவும் ஊக்குவித்தார். மாஸ்டரின் காங்டாக் பயணத்தில் கலந்து கொள்ளும், அதிர்ஷ்டமான வாய்ப்பைப் பெற்ற சகோ. முந்த்ரா, அப்பயணத்தின் அழகான புகைப் படங்களை அனைவருடனும் பகிர்ந்துகொண்டார்.

அந்த இடங்களைப் பார்ப்பதில் மாஸ்டருக்கு இருந்த ஆர்வத்தையும், விருப்பத்தையும் பற்றிக் கூறினார். மாஸ்டர் உரையாடிய நகைச்சுவையான, ஆனால் அர்த்தம் பொதிந்த தருணங்களைப்பற்றிக் கூறினார். கரக்பூர் CRESTல் மாஸ்டருடன் இருக்க வாய்ப்புப்பெற்ற சகோ. ரவேர்கர், மாஸ்டர் ஆற்றிய உரைகளின் முக்கியப்பகுதிகளைப் பகிர்ந்து கொண்டார். பல்வேறு அனுபவங்களைக் கேட்டறிந்தபோது, அப்யாசிகளின் உள்ளங்கள், மகிழ்ச்சியால்நிரம்பியதைக் காண முடிந்தது.

குஜராத்தில் உள்ள பூஜ் மையத்தில், நவம்பர் 15 அன்று, சுமார் 21 அப்யாசிகள் கலந்து கொண்ட, அரை நாள் பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், சாதனா சம்பந்தமான, பல தலைப்புகளைப்பற்றிய உரைகள், நிகழ்த்தப்பட்டன. சத்சங்கத்தின் முக்கியத்துவத்தை விளக்கும், நாரதர் பற்றிய ஒரு சிறிய நாடகமும், அப்யாசிகளால் நடத்தப்பட்டது. பங்கேற்றவர்கள், இந்நிகழ்ச்சியின் மூலம், தங்கள் சந்தேகங்கள் எல்லாம் தெளிவாக்கப்பட்டு உற்சாகத்துடன் திரும்பிச் சென்றனர்.

நவம்பர் 14, 15 அன்று, வதோதரா மையம், இளைஞர்களுக்கான அரை நாள் பயிற்சி முகாம் ஒன்றை, ஏற்பாடு செய்தது. சுமார் 35 அப்யாசிகள் கலந்துகொண்ட இக்கூட்டம், இளைஞர்கள் சகஜமார்க்கத்தைப்பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கும், மிஷன் செயல்பாடுகளில் தங்கள் பங்கை உணர்ந்து கொள்வதற்கும், சகோதரத்துவத்தைப் பலப்படுத்துவதற்கும் ஏதுவாக, ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது.

பங்கேற்றவர்கள், இம்முகாம் மிகவும் உதவியாகவும், படிப்பினை ஊட்டுவதாகவும் இருந்ததாக உணர்ந்தனர்.

நவம்பர் 15 அன்று, தாவண்கெரே மையத்தில், சித்ரதுர்கா, கரூர், ஹரிஹரா மற்றும் பத்ராவதியில் இருந்து வந்திருந்த, சுமார் 70 அப்யாசிகளுக்கு, ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

சகோ. R .ரமணி, சகோ. ராகேஷ், சகோதரி இந்திரா பிரசாத் மற்றும் சகோ. சுஜாதா ஆகியோர் பங்கேற்றனர். முதல் பகுதியில், ஒரு தலைப்பைப் பற்றி கலந்துரையாட ஏதுவாக, அப்யாசிகள் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். கலந்துரையாடலின் முக்கியக்குறிப்புக்களை, குழுவின் உதவியாளர்கள், எடுத்துரைத்தனர். சில அப்யாசிகள் கேள்விகளுக்கு, பயிற்சியாளர்கள் விடையளித்து, ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாக்கினர்.

இரண்டாம் பகுதியில், ஆன்மீகப்பாதையில் மாஸ்டர் எவ்வாறு முக்கியமான பங்கேற்கிறார் என்பதைப்பற்றியும், நாம் மாஸ்டருடன் ஒத்துழைப்பதன் அவசியம் பற்றியும், சகோ. B. ஸ்ரீனிவாசா விளக்கினார்.

அப்யாசிகளின் நடத்தை, எண்ணம் ஆகியவற்றைப்பற்றிய, நாடகம் ஒன்றை, குழந்தைகள் நடித்துக்காட்டினர். இந்நிகழ்ச்சி ஒவ்வொரு அப்யாசிக்கும், நிறைய செய்திகளை அறிந்து கொள்ள உதவியதுடன், அங்கு மகிழ்ச்சியான சூழலையும் நிலவச் செய்தது.

ராஞ்சி



பூஜ்



தாவண்கெரே



## வி பி எஸ் இ - நிகழ்ச்சிகள்

### ஹொஷங்காபாத்



கடந்த இரண்டு வருடங்களாக, ஹொஷங்காபாத் மையத்தில் உள்ள சேவாபள்ளி, வி பி எஸ் இ பாடத்திட்டத்தின்படி, நன்னெறிகளைக் கற்பிக்க, ஒரு காலப்பகுதியைத் தனியாக ஒதுக்கி உள்ளது. இந்த வருடம், ஆண்டு விழாவிற்காத் திட்டமிட்டபோது, நன்னெறிகள் மீது கவனம் செலுத்த நினைத்த பள்ளி நிர்வாகிகள், வி பி எஸ் இ ஒருங்கிணைப்பாளரின் உதவியை நாடினர். தன்னார்வத்தொண்டர்குழு, மாணவர்களுடன் இணைந்து, 'மகிழ்ச்சி' என்ற நன்னெறியை எடுத்துக்கொண்டு, அதன் அனைத்து அம்சங்களையும் விவரிக்கும் வண்ணம், ஒருசிறிய நாடகம், பாடல்கள் மற்றும் நாட்டியம் ஆகியவற்றைத்தயாரித்தது. பெற்றோர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டதால், செய்தியானது பெரும்பான்மையான மக்களை அடைய வழிமுறையாக அமைந்தது.

தன் நன்னெறிக்கல்வி முறையால், இப்பள்ளியானது, மேலும் அதிகமான பெற்றோர்களைக் கவர்ந்து, அதன்மூலம் மிகப்பணிவான முறையில் மாஸ்டருக்கு சேவை புரிகிறது.

### உர்சுலைன் கான்வென்ட், ராஞ்சி



நேரத்தின் மதிப்பு, நேரத்தை நிர்வகித்தல், மற்றும் மனித வாழ்வின் நோக்கம், போன்ற பல விதமான பொருள்களைப் பற்றிய கருத்துக்களை, நவம்பர் 5ம் தேதி நடைபெற்ற ஒருமணி நேர நிகழ்ச்சியில், சுமார் 900 மாணவர்கள் கேட்டனர். மிஷனின் பிரார்த்தனையும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டது.

மனதில் பதிப்புகள் ஏற்படாமல் இருக்க, வேலை செய்து உடன் அதை மறக்க. குழந்தைகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. நாம், எவ்வாறு நல்லகுணம் கெட்டகுணம் ஆகியவற்றை வளர்த்துக் கொள்கிறோம் என்றும், எவ்வாறு பழக்கங்களால் கட்டுப்பட்டதாக உணருகிறோம் என்றும், பரிசோதனைகள், எடுத்துக்காட்டுகள் மூலம் காட்டப்பட்டன.

நேரத்தையும், வேலையையும் நிர்வகிக்க, 4D முறையை சகோ.அருண்குமார் பகிர்ந்து கொண்டார். பல்வேறு வேலைகளையும், வெவ்வேறு கூடைகளில் வகைப்படுத்தக் கூறினார். முதலில் மற்றவர்களிடம் ஒப்படைக்கக்கூடிய வேலைகள் (delegate), இரண்டாவதாக, தாமதமாகச் செய்யக்கூடிய வேலைகள் (delay), பிறகு, செய்யத் தேவையில்லாத வேலைகள்(delete), பின், இப்போதே தாமதமின்றி செய்து முடிக்க வேண்டிய வேலைகள் (to be done now).

நிறைவுப்பகுதியில், நிர்வாகிகளும், குழந்தைகளும் கேட்ட பல்வேறு கேள்விகளில் இருந்து, நிகழ்ச்சியை அவர்கள் எவ்வாறு விரும்பினார்கள் என்பது தெளிவாகத்தெரிந்தது.

### ஃபராக்கா, மேற்கு வங்காளம்,

ஃபராக்கா DPS பள்ளிமுதல்வர் சகோ.சுப்ரமண்யகுமார், மற்றும் சகோ.விஜய்குமார் அவர்களால் வி.பி.எஸ்.இ நிகழ்ச்சி ஏற்பாடுசெய்யப்பட்டது.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் முதல்நாளான டிசம்பர் 11 அன்று, முதல்பிரிவு, 6-8ம் வகுப்பைச் சேர்ந்த சுமார் 300 குழந்தைகளுக்கும், இரண்டாம் பிரிவு, 9-11ம் வகுப்பைச் சேர்ந்த சுமார் 200 குழந்தைகளுக்கும் நடத்தப்பட்டது. 12ம் தேதி அன்று, ஆசிரியர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. அதில் ஃபராக்காவில் உள்ள சில பள்ளிகளைச் சேர்ந்த 57 ஆசிரியர்களும், 3 பள்ளி முதல்வர்களும் கலந்து கொண்டனர்.

பல்வேறு கதைகள், மற்றும் பரிசோதனைகள் மூலமாக, நன்னெறிகள் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இரண்டு பிரிவைச் சேர்ந்த குழந்தைகளும், ஆசிரியர்களும், பரிசோதனைகளை நன்குபுரிந்து கொண்டு, ஏற்றுக் கொண்டனர். இறுதியில் குழந்தைகளிடம், அவர்கள் தங்களை ஆசிரியர்களாக கற்பனை செய்து, மாணவர்களிடம் அவர்கள் எதிர்பார்ப்பதையும், மாணவர்களாக கற்பனை செய்து கொண்டு, ஆசிரியர்களிடம் அவர்கள் எதிர்பார்ப்பதையும் குறித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

மாணவர்களிடம் இருந்து பெறப்பட்ட இக்கருத்துக்கள், அடுத்த நாள் நடந்த ஆசிரியர் கூட்டத்தில் அவர்களிடம், நல்லபயன் அளிக்கும் முறையில் தெரிவிக்கப்பட்டது. குழந்தைகளின் உள்ளே இருக்கும் அளவற்ற செல்வத்தை வெளிக்கொணர, உண்மையாகவே முயற்சிக்கிறார்களா? அல்லது தங்கள் சம்பளம் பெறுவதில்மட்டும் அக்கறை கொண்டுள்ளார்களா?

நமக்குக்கற்பிக்கும் எல்லா ஆசிரியர்களையும் நினைவில் கொள்ளாமல், ஏன் ஒரு சிலரை மட்டுமே நினைத்துப் பார்க்கிறோம்? மாணவர்கள் ஆர்வத்துடன் பின்பற்றும் வகையில், ஒரு உதாரணமாக நாம் இருக்கிறோமா? போன்ற பல கேள்விகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்படி, ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியால் மிகவும் கவரப்பட்ட ஆசிரியர்கள், திரும்பவும் இந்நிகழ்ச்சியை நடத்தவும், தியானமும் அதில் சேர்க்கப்படவேண்டும் என்றும் கருத்து வழங்கினர்.

### ஹுப்ளி

நவம்பர் 10ம் தேதி அன்று, ஹுப்ளி மையத்தில் காலை 10 முதல் மாலை 5 மணி வரை, ஒருநிகழ்ச்சி நடத்தப்பட்டது. பெங்களூரைச் சேர்ந்த சகோ. மாதுரி மற்றும் சகோ. சரோஜா ஆகியோர், சுமார் 41 ஆசிரியர்களுக்கும், 15 அப்யாசிகளுக்கும் இந்நிகழ்ச்சியை நடத்தினர்.

நன்னெறிகளின் அர்த்தம்பற்றி சகோ.மாதுரி விவரித்தார். சகோ.அஜித் காமத், நன்னெறிகளின் அவசியம் பற்றிக் கூறினார். வயதுடன் மாறும் அறிவுத்திறன், 4 முதல் 7வயதுக்குழந்தைகளால் எவ்வாறு ஆசிரியர்களைப் பின்பற்ற முடிகிறது, அதன்பின் தீர்மானம் செய்யும் மனப்பாங்கு வளர்கிறது என்பவை பற்றி சகோ.சரோஜா விளக்கினர். ஆசிரியர் ஒருவர் வகுப்பறையில் நுழையும் போது, பௌதிகநிலை, மனநிலை, உணர்ச்சி நிலை ஆகிய மூன்று குணாதி சயங்களுடன் இருக்கிறார். அதைப்போலவே ஒரு குழந்தையும் வகுப்பில் நுழைக்கிறது. ஆசிரியரின் மனநிலையை, மிக வேகமாக, பெரியவர்களைவிட வேகமாக குழந்தை அறிந்து கொண்டு விடுகிறது.

திறந்த உள்ளம், கொடுப்பது, பெறுவது மற்றும் ஒத்துழைப்பு ஆகிய நன்னெறிகளைப்புகட்ட, சில விளையாட்டுகள் விளையாடப்பட்டன. க்ளிப், கண்ணாடி, பேனா ஆகியவை ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டு, அதன் மூலம் அவர்கள் அறியும் நன்னெறிகளைப்பற்றிக்கூற, குழுக்கலந்துரையாடல்கள் இருந்தன. சரித்திரம், பூகோளம் போன்ற பாடங்களுடனும், நசுனெறிகளை இணைக்குமாறு ஆசிரியர்களிடம் கூறப்பட்டது. ஆசிரியர்கள் முழுவதும் பங்கேற்ற ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியாக இது அமைக்கப்பட்டது.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## அனுபவத்தைப்பகிர்ந்து கொள்ளுதல் - பெங்களூர்



2009 டிசம்பர் 20 அன்று, பரம்தாம் ஆசிரமத்தில் சத்சங்கத்திற்குப்பின், அதன் விரிவாக ஒரு நிகழ்ச்சி நடைப்பெற்றது. மாஸ்டரின் சமீபத்திய பெங்களூர் வருகையின் போது, தங்களுக்குக்கிடைத்த அனுபவங்கள், கற்ற பாடங்கள் ஆகியவற்றை, அப்யாசிகள் பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியினால் ஏற்பட்டசில எண்ணங்கள் கீழ்வருமாறு:

- மாஸ்டரின் பணி இதயத்திலிருந்து இதயத்திற்கு ஆகும். ஒவ்வொரு இதயமும் எவ்வாறு அனுபவிக்கிறது என்று தெரிந்து, உடனே அந்த உள்ளத்தின்குமுறல், வலி ஆகியவற்றை உணர்ந்து கொள்கிறார். அவருக்காக நாம் நம் இதயத்தைத் திறந்து வைத்துக் கொள்வது மட்டுமே போதுமானது.
- 'வெளியே எவ்வாறு இருக்கிறோமோ உள்ளேயும் அப்படியே இருக்கவேண்டும்' அதுவே சிறந்த குணம் என்று மாஸ்டர் கூறுகிறார். நாம் மாஸ்டரை நன்கு கவனித்து, இதை எவ்வாறு வழக்கப்படுத்திக்கொள்வது என்று கற்றுக்கொள்ள வேண்டும்.
- மாஸ்டரின் ஒவ்வொரு வருகையும், அப்யாசிகளுக்கு, பொறுமை, எதிர்பார்த்துக் காத்திருத்தல் என்ற கலை, ஆகியவற்றைக் கற்றுக்கொள்ள ஒரு வாய்ப்பாகும். எனவே மாஸ்டரின் வருகை, பல்வேறு நிலைகளிலும் காத்திருப்பதைக் கற்றுக்கொள்ள ஒரு பயிற்சித்தளத்தை நமக்கு அளிக்கிறது.
- மாஸ்டர் எநத ஒரு மையத்திற்கு வருகை புரிந்தாலும், அது நம் ஆன்மீகப் பயிற்சி வளர ஒரு வாய்ப்பாகும். எனவே, அதிக அளவு வளர்ச்சி பெற, அவர் வருகைக்கு முன்பு, நம்மைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும். அநேக அனுபவங்களை, வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அவைகளை நம் ஆழ் மனதில் போற்றி வைத்து, அவற்றை மாஸ்டர் மீதான அன்பு, நன்றியுணர்வு போன்றவையாக மாற்ற வேண்டும்.

## ஆண்டு விழா கொண்டாட்டங்கள் - கொல்கத்தா ஆசிரமம்

கொழுகத்தா ஆசிரமம் திறக்கப்பட்டு, அதன் 6 வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் நோக்கத்துடன், டிசம்பர் 25ம் தேதி அன்று, அப்யாசிகளுக்கும், குழந்தைகளுக்கும் விளையாட்டு நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. எல்லா வயதினையும் சேர்ந்த சுமார் 400 பேர் பங்கேற்ற இந்நிகழ்ச்சி, சகோ.ஜெயின் மற்றும் சகோ.கோத்தாரி ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டது.

3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அணைக்கும் போட்டி நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட குழந்தைகள், ஓடி வந்து தங்கள் பெற்றோர்களை அணைத்துகொண்டனர். வயதில் பெரிய குழந்தைகள், ஒரு கிண்ணத்தில் கலந்திருந்த பருப்பு மற்றும் ராஜ்மா தானியத்தை பிரித்தெடுக்கும் விளையாட்டை ஆடினர்.



அப்யாசிகளிடம், ஆசிரமத்திற்கு வரும் குறிக்கோளை உருவாக்கியது குழந்தைகள்தான் என்பது இந்நிகழ்ச்சியின் சிறப்பான அம்சம் ஆகும்.

## உள் மன ஆராய்ச்சியும் பிரதிபலிப்பும் - இந்தூர்

டிசம்பர் 18 முதல் 22 வரையிலான 5 நாட்களுக்கு, 8 அப்யாசிகள், ஆசிரமத்தின் அமைதியான சூழ்நிலையில் தங்கினர். அப்யாசிகள், தங்களுள் ஆழ்ந்து நோக்கி, உண்மையான நிலையில் மாஸ்டரை நோக்கிச் செல்ல உதவுவதே, இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும்.

சொற்பொழிவுகள், உரைகள் எதுவுமே நடைபெறவில்லை. அப்யாசிகள் தங்கள் பயிற்சியைப் பற்றி சிந்தித்து, சுய ஆய்வு செய்து, டைரி எழுதி, புத்தகங்கள் படித்து, தியானம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

சகோ. N.V. தேஷ்பாண்டே, அப்யாசிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் சில வார்த்தைகள் கூறினார். அவர்கள் தனி சிட்டிங்குகள் எடுத்துக்கொள்ளும்பொருட்டு, தினமும் காலையும், மாலையும் ஒரு பிரிசெப்டர் ஆசிரமத்திற்கு வந்தார்.

அப்யாசிகள், புத்துணர்வு, ஆழ்ந்த அமைதி ஆகியவற்றை உணர்ந்ததுடன், வாழ்வின் குறிக்கோளுக்கான தீவிர உறுதியுடன், உலக வாழ்க்கைக்குத் திரும்பினர். சகோ.அவினாஷ் கர்மார்கர், மற்றும் சகோ.ராஜேஷ் ராவேர்கர் ஆகியோர் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். இதே மாதிரியான நிகழ்ச்சி, மண்டல அளவிலும் திட்டமிடப்பட்டு வருகிறது.

## மகாராஷ்டிரா இளைஞர் சிறப்புக்கூட்டம்



2009, டிசம்பர் 18முதல் 20 வரை, புனேயில் நடந்த இளைஞர் சிறப்புக்கூட்டத்தில், 47 பேர் கலந்து கொண்டனர்.

முறையான கலந்துரையாடல்களைத்தவிர, ஒவ்வொருவரின் தனிப்பட்ட பயிற்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சகோ.வைத்யா, பங்கேற்பாளர்களை வரவேற்று, பயிற்சியாளர்களை அறிமுகம் செய்து வைத்தார். அப்யாசிகள் அ குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். ஒவ்வொர் குழுவினரும், தங்களை அறிமுகம் செய்து கொண்டு, ராஜயோகத்தின் ஒரு நிலையைப்பற்றிப் பேச வேண்டும். சகஜ மார்க்கப்பாதையில் சுய முன்னேற்றம், நாள்தோறும் செய்யும் பயிற்சி, அன்பு, பரிவு மற்றும் கருணை, நம்பிக்கை மற்றும் சாதனா மூலம் மனவலிமை, ஆசையும் ஆர்வமும், குணமும் மாற்றமும், மற்றும், மன அழுத்தத்தை எவ்வாறு கையாள்வது? போன்ற பல பொருள்கள் பற்றி பேசப்பட்டன.

அடுத்தநாள், சமநிலைவாழ்கை - ஒரு கலை, நமது சமுதாயத்தில் நம் பொறுப்பு, மாஸ்டருடன் உறவை வளர்த்துக் கொள்ளுதல், பயன்படத்தக்க, சிறந்தமுறையில் செய்தி அளித்தல், ஆகிய பொருள்களில் உரையாடல்கள் இருந்தன. நிகழ்ச்சி முடிவடைந்தாலும், ஒரு சில பங்கேற்பாளர்களுக்கு, அது ஒரு புதிய தொடக்கமாக இருந்தது..

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

Centre of Light

## அலகாபாத் ஆசிரமம்







அலகாபாத் மையம், 1965ம் ஆண்டு அதிகாரபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டபோது, ஸ்ரீ M.L. சதுர்வேதி அம்மையத்தின் பிரிசெப்டராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து 1994ம் ஆண்டுவரை, அவரது இல்லத்திலேயே ஆசிரமம் செயல்பட ஆரம்பித்து, ஞாயிறு சத்சங்கங்களும் அங்கேயே நடைபெற்றன.

அப்யாசிகள், நிதி திரட்டி, அலகாபாத்தில் உள்ள முண்டேரா என்னும் இடத்தில் 13 ஏக்கர் நிலம் வாங்கினர். அதில் 4 ஏக்கர் நிலம், நன் கொடையாக மிஷனுக்கு அளிக்கப்பட்டது. 1994, நவம்பர் 13ந் தேதி, மாஸ்டரின் நல்லாசிகளுடன், முதல் சத்சங்கம் இந்த இடத்தில் நடைபெற்றது.



ஸ்ரீ R.R.K. திரிவேதி அவர்களின் முயற்சியின் பயனாக, 1996 பிப்ரவரி 27ம் தேதி, உத்தரப்பிரதேசம் ஆளுநர் ஸ்ரீ. மோதிலால் வோரா, தியானக்கூடம் கட்டுவதற்காக, முதல் பொருளுதவியாக 10லட்சம் பெற அனுமதி அளித்தார். 1996, மார்ச் 9ம் தேதி வணக்கத்திற்குரிய மாஸ்டரின் முன்னிலையில், மேதகு ஆளுநரால் அடிக்கல் நாட்டப்பட்டது. மாஸ்டர் தனது உரையில், இமாலயத்தில் தவம் செய்யும் ரிஷிகள், தெய்வீக உந்துதல் மூலம், எவ்வாறு கட்டளைகளை மக்கள் இதயங்களுக்குத் தெரிவித்தனர் என்று கூறினார். திரு.வோராவும் அத்தகைய தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். செல்வாக்குள்ள பதவியில் இருப்பவர்கள், சமுதாய நலனில் மட்டுமே அக்கறை செலுத்தாமல், மக்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கும் அதனை பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். அதையடுத்து தியானக்கூடம் அமைப்பதற்கு, மேலும் மூன்று கூட்டு நிதிஉதவிக்கு அனுமதி கிடைக்கப்பெற்றது.



தியானக்கூடம், 1997, நவம்பர் 14அன்று, மாஸ்டரால் திறந்து வைக்கப்பட்டது. கட்டிடத்தின் நிலத்தளம் 10,000 ச.அடி அளவிலும், இரண்டு உப்பரிகைகள் ஒவ்வொன்றும் 2,000 ச.அடி அளவிலும் உள்ளன. இம்மையத்தில் ஒரு ஆசிரமம் உருவாகும் என்பதில் ஐயமே இருந்ததில்லை என்று மாஸ்டர் தன் உரையில் கூறினார். அனைவரும் இதயபூர்வமாக வேலை செய்ததால், கட்டிட வேலையில் ஆச்சரியப்படத்தக்க வேகம் சாத்தியமாயிற்று. நம் படை, நம் வலிமை அனைத்தும் மிஷனின் இளைஞர்கள் தான் என்றும், அவர்களிடம் காணப்படும் ஆர்வம், வயதானவர்களிடம் இல்லை என்றும் மாஸ்டர் கூறினார்.



சகோ. U.S. வாஜ்பாய் அவர்களின் தொடர்ந்த முயற்சியால், உத்தரபிரதேச அரசாங்கத்திடம் இருந்து, மாஸ்டர் குடில், நூலகம், படிக்கும் அறை, சமையலறை, உணவுக்கூடம், தங்கும் கூடம், கழிப்பறைகள் மற்றும் பாதைகள் ஆகியவைகள் கட்டுவதற்குத் தேவையான நிதி உதவிகள் கிடைத்தன.

இவ்வாறு அலகாபாத்தில் ஆசிரமம் விரிவடைவதற்காக, அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கப் பெற்ற மொத்தநிதி உதவித் தொகை ரூ. 80 லட்சம் ஆகும். நம்நாட்டிலேயே, இந்த ஆசிரமம் தான், அரசாங்கத்திடம் இருந்து கணிசமான நிதி உதவிபெற்ற, மிஷனின் முதல் ஆசிரமம் ஆகும். மாஸ்டர் குடிலின் அருகில், பழ மரங்களும், பூச்செடிகளும் நிறைந்த, நன்கு பராமரிக்கப்பட்ட தோட்டம் ஒன்று உள்ளது.



சுற்றுப்புற இடங்களில் உள்ள, மருத்துவவசதி தேவைப்படும் எழைகளுக்குச் சேவைபுரியும் ஒரு ஆரோக்கிய மையமும், ஆசிரமத்தில் முழு அளவில் செயல்பட்டு வருகிறது.

சுமார் 400 அப்யாசிகள் ஞாயிறு சத்சங்கத்தில் கலந்து கொள்கிறார்கள். தினமும் காலையும், மாலையும் சத்சங்கம் நடைபெறுகிறது. பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளும், ஆசிரமத்தில் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2009 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.